# யூன் – 28 – வெள்ளி

## இயேசுவின் திரு இருதயப் பெருவிழா

## ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை. திபா. 23:1

---

## முதல் வாசகம் : ஏசேக்கியேல் : 34 : 11 – 16

எனவே, தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் : நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக்காப்பேன்.ஓர் ஆயன் தன் மந்தையினின்று சிதறுண்ட ஆடுகளைத் தேடிச் செல்வதுபோல, நானும் என்மந்தையைத் தேடிப்போவேன். மப்பும் மந்தாரமுமான நாளில் அவற்றை எல்லா இடங்களினின்றும் மீட்டு வருவேன்.மக்களினங்களினின்று அவற்றை வெளிக்கொணர்ந்து, நாடுகளினின்று கூட்டிச்சேர்த்து, அவற்றின் சொந்த நாட்டிற்கு அழைத்து வருவேன். அவற்றை இஸ்ரயேலின் மலைகளிலும் ஓடையோரங்களிலும் நாட்டின் எல்லாக் குடியிருப்புகளிலும் மேய்ப்பேன்.நல்ல மேய்ச்சல் நிலத்தில் அவற்றை மேய்ப்பேன். இஸ்ரயேலின் மலையுச்சிகளில் அவற்றின் மேய்ச்சல் நிலம் இருக்கும். அங்கே வளமான மேய்ச்சல் நிலத்தில் அவை இளைப்பாறும். இஸ்ரயேலின் மலைகளின்மேல் செழிப்பான மேய்ச்சல் நிலத்தில் அவை மேயும்.நானே என் மந்தையை மேய்த்து, இளைப்பாறச் செய்வேன், என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.காணாமல் போனதைத் தேடுவேன் அலைந்து திரிவதைத் திரும்பக்கொண்டுவருவேன் காயப்பட்டதற்குக் கட்டுப்போடுவேன் நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன். ஆனால், கொழுத்ததையும் வலிமையுள்ளதையும் அழிப்பேன். இவ்வாறு நீதியுடன் அவற்றை மேய்ப்பேன்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 5 : 5 - 11

சகோதரர் சகோதரிகளே!நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.நாம் இறைப்பற்று இன்றி வலுவற்று இருந்தபோதே, குறித்தகாலம் வந்ததும் கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்.நேர்மையாளருக்காக ஒருவர் தம் உயிரைக் கொடுத்தலே அரிது. ஒருவேளை நல்லவர் ஒருவருக்காக யாரேனும் தம் உயிரைக் கொடுக்கத் துணியலாம்.ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக் காட்டியுள்ளார்.ஆகையால் இப்போது நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகி, அவர் வழியாய் தண்டனையிலிருந்து தப்பி மீட்புப்பெறுவோம் என மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ?நாம் கடவுளுக்குப் பகைவர்களாயிருந்தும் அவருடைய மகன் நமக்காக உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம். அப்படியானால் ஒப்புரவாக்கப்பட்டுள்ள நாம், வாழும் அவர் மகன் வழியாகவே மீட்கப்படுவோம் என மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ! அது மட்டுமல்ல, இப்போது கடவுளோடு நம்மை ஒப்புரவாக்கியுள்ள நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் நாம் கடவுளோடு உறவுகொண்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். இம்மகிழ்ச்சியை நமக்குத் தருபவர் கடவுளே.

## நற்செய்தி : லூக்கா 15 :3–7

அக்காலத்தில் இயேசு அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார் : ”உங்களுள் ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று காணாமற் போனால் அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் பாலை நிலத்தில் விட்டுவிட்டு, காணாமற் போனதைக் கண்டுபிடிக்கும் வரை தேடிச்செல்ல மாட்டாரா?கண்டுபிடித்ததும், அவர் அதை மகிழ்ச்சியோடு தம் தோள்மேல் போட்டுக் கொள்வார். வீட்டுக்கு வந்து, நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைத்து, ”என்னோடு மகிழுங்கள் ஏனெனில் காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன்” என்பார்.அதுபோலவே மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியைவிட, மனம்மாறிய ஒருபாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்“

**தியானம் :** “இயேசுவின் மாசற்ற இருதயமே எனது இருதயத்தை உமது இருதயத்தைப் போலாகப் பண்ணியருளும்”. திச்சபையானது இன்றைய நாளை திரு இருதயத்தை நினைவு கூரும் நாளாக கொண்டடுகின்றது. “நான் தூயோராகவும் மாற்றோராகவும் இருப்பது போன்று நீங்களும் அவ்வாறே இருங்கள்” என்று இயேசு கூறுவதை வேதாகமத்தில் பார்க்கின்றோம். இன்று நாங்களும் எமது உள்ளத்திலுள்ள பாவங்களை நீக்கிவிட்டு அவரது இருதயத்தைப் போன்று எங்களது இருதயத்தை போல் இருக்க மன்றாடுவோம். இறைவன் எம்மேல் கொண்ட அன்பின் நிமித்தம் தனது மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவரும் பல பாடுகள், அவமானங்கள், வேதனைகள் பட்டு இறுதியில் மரித்து உயிர்த்து இன்றும் எங்களுக்குத் தேவையானவற்றை செய்கின்றார் என்பதை இன்றைய வாசகங்கள் தெரிவிக்கின்றன. ஒரு ஆயனானவன் தனது மந்தைகள் யாவற்றையும் பாதுகாத்து பசியோ, தாகமோ, நோயோ ஏற்பட்டபோது அருகே இருந்து ஆறுதலளித்து பாதுகாத்து வருகின்றார். அதே போன்று இறைமகன் இயேசுவும் எமக்கு எந்த வேளையிலும் குடும்பப் பிரச்சனைகளாக இருந்தாலும், நாங்கள் உலக மாயைக்குள் அகப்பட்டாலும். நோய், வேதனைகளாக இருந்தாலும் மனம் உடைந்தவர்களாக யார் உதவி செய்வார் என்று திகைத்தவர்களாக இருக்கலாம், ஆனால் அவர் எங்களை அப்படியே விட்டுவிவதில்லை. “நான் உன்னை விட்டு விலகுவதில்லை உன்னை என்றும் கைவிடுவதில்லை” என்ற இறைவார்த்தைக்கிணங்க அவர் மந்தையை விட்டு சென்ற ஆட்டை மீண்டு கண்டுபிடித்து மந்தைக்குள் ஒன்று சேர்த்தாரோ அதேபோன்ற எங்களது பாவங்களையும் மன்னித்து தன்னோடே இணைத்துக் கொள்வார். எனவே எமது பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு வேண்டி தூய வாழ்வ வாழ தூய ஆவியானவரிடம் வரம் வேண்டுவோம்.